**(2024-25-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **24 PTM 313**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

எம். ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

மூன்றாம் பருவம் — நேரம் : 3 மணி

## பெண்ணியம்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. இங்கிலாந்துப் பெண்களின் உரிமைக்குரல் ஒலிக்கத் தொடங்கிய காலம் எது?
   (அ) 16-ஆம் நூற்றாண்டு (ஆ)18-ஆம் நூற்றாண்டு
   (இ) 19-ஆம் நூற்றாண்டு (ஈ) 21-ஆம் நூற்றாண்டு
2. சமூகத்தில் ஆண் பெண் சமநிலை குறித்து முதன்முதலில் நூல் எழுதியவர்.........
   (அ) தாமஸ்பைன் (ஆ) வால்டர்
   (இ) டிடராட் (ஈ) மேரிஉல்ஸ்டோன் கிராப்ட்
3. ஆண், பெண் உறவுநிலைப் பற்றிக் குறிப்பிடும் சங்க இலக்கியப் பிரிவு.........
   (அ) அறத்தோடு நிற்றல் (ஆ) அகம்
   (இ) புறம் (ஈ) உடன்போக்கு
4. தாய்வழிச் சமூக அமைப்பில் யாருக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டது?
   (அ) குழந்தைகள் (ஆ) பெண்கள் (இ) ஆண்கள் (ஈ) முதியோர்
5. வன்முறை என்ற சொல்லின் உள்ளீடாக ____________________ இயங்கிக் கொண்டிருக்கிறது.
   (அ) அன்பு (ஆ) ஆணவம் (இ) அதிகாரம் (ஈ) அறிவு

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. எந்த காலகட்டத்தில் பெண்களின் வாழ்நிலையில் சட்டரீதியான முன்னேற்றமில்லை
7. 1958-இல் அமெரிக்காவில் மக்கட்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?
8. அலெக்சாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த ஆண்டினைக் குறிப்பிடுக.
9. மார்க்சியலாளர்களின் கோட்பாட்டில் வளர்ந்த பெண்ணியத்தின் பெயர் எழுதுக.
10. உடன்கட்டை ஏறும் பழக்கம் மிகுதியாகக் காணப்பட்ட வடமாநிலம் எது?

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெணகள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. (அ) மீட்புவாதம் - விளக்கம் தருக.

    (அல்லது)

    (ஆ) அமெரிக்கப் பெண்ணியம் குறித்தெழுதுக.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. (அ) மிதவாதக் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சோஷலிசக் கருத்துக்களை ஏடத்தியம்புக.

13. (அ) பெண்சிசுக்கொலை பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) இளவயதுத் திருமணம் குறித்து விளக்குக.

14. (அ) பாலியல் பணி வேறுபாடு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பாலியல் அரசியல் - விளக்கம் தருக.

15. (அ) வாழ்தலின் வன்முறை என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) சமூக வன்முறை குறித்து எழுதுக.

## பகுதி – இ ( **5 X 8 = 40** மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.

**(K4 (Or) K5)**

16. (அ) பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, வாக்குரிமை குறித்து அமெரிக்காவின் பெண்ணியச் சிந்தனையை விளக்குக.

(அல்லது)

(ஆ) பின்னைப் பெண்ணியம் (Post Feminism) விவரி.

17. (அ) பெண்ணியம் குறித்த உமது புரிதலைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பெண்கல்வியின் தாக்கம் மற்றும் தொழிற்புரட்சியின் விளைவுகளை எடுத்துரைக்க.

18. (அ) தேவதாசிமுறை மற்றும் உடன்கட்டை ஏறுதல் பற்றி விரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) இந்தியப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் குறித்து விவரி.

19. (அ) பெண்ணியக் கருத்தாக்கங்களை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்ககாலப் பெண்டிர் உரிமை பெற்றமைந்தனர் என்பதை இலக்கியச் சான்றுகள் வழி நிறுவுக.

20. (அ) மேலைநாட்டுப் பெண்ணியம் இந்தியப் பெண்ணியம் வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) இந்தியப் பெண்களின் நிலையுயர்த்தும் வழிமுறைகளைக் கட்டுரைக்க.



**********